நல்லூர் பிரதேச நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

88 A/L
2 வது பிரிவு
12 00 Maths திரு. நல்லையா
11 30 Zoo திரு. தம்பிராஜா
12-00 Bot திரு. சர்வானந்தா
8 30 Phy திரு. யோகானந்தா
9-30 Chem திரு. செல்வா, அன்ரன்
ஆரம்பம்: 3-8-86 (ஞாயிறு)
BECON
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)
யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

87 A/L 88
2nd Batch
Sat. Sun.
1.30 பௌதிகவியல் - திரு. வரதராஜன்
12.00 கணிதவியல் - திரு. மரியதாஸ்
11.00 வர்த்தகம் - திரு. ரட்ணம்
10.00 அளவையியல் - திரு. எஸ். ஏஸ். மகேந்திரன்
9.00 இந்துநாகரிகம் - திரு. அருள்நங்கை
8.00 தமிழ் - திரு. நாகேஸ்வரன்
புவியியல், அரசியல், -
ஆரம்பம் - 3.8.86 (ஞாயிறு)
BECON (ஸ்ரீதர் சினிமா முன்பாக)
யாழ்ப்பாணம்.

சுடர்: 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆடி மீ 16 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1406 ஜுல்கஃ பிறை 24 (1-08.1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY சுடர்: 219

செங்கலடி வந்த

# மந்திரியை பாதுகாத்து நின்ற பொலிசார் மீது புலிகள் சூடு!

## தேவா சடுதியாக கொழும்பு திரும்பினார்; நிகழ்ச்சியும் ரத்து

— மட்டக்களப்பு மாவட்டச் செய்தியாளர்: உதயசாரதி —

மட்டக்களப்பு, ஆக. 1

நேற்று செங்கலடிக்கு விஜயம் செய்திருந்த அமைச்சர் தேவநாயகம் தமது நிகழ்ச்சிகளை இடைநடுவில் கைவிட்டு விட்டு ஹெலிக்கொப்டர் மூலம் அவசர அவசரமாகக் கொழும்பு திரும்ப வேண்டியதாயிற்று.

தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் சம்பவங்களை அடுத்தே அமைச்சர் இடைவழியில் திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது.

புலிகளின் தாக்குதல்களினால் அமைச்சரின் விஜயம் தொடர்பாகப் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ரிசர்வ் பொலீஸார் ஒருவர் உயிரிழந்தார். இரண்டு பொலீஸார் காயமடைந்தனர்.

படையினரின் பதில் தாக்குதலில் இரண்டு பொதுமக்கள் உயிரிழந்தனர்.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது;

நேற்றுக் காலை அமைச்சர் தேவநாயகம் செங்கலடி தபால் நிலையக் கட்டடத்தைத் திறந்து வைத்துவிட்டுப் பேசிக் கொண்டிருந்தார்.

அவ்வேளையில் செங்கலடிச் சந்தியில் வைத்து ரோந்து சென்ற ஆயுதப் படை வாகனத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. அதில் 2 பொலீஸார் காயமடைந்தனர்.

அதைத் தொடர்ந்து அமைச்சர் பிரசவ விடுதி ஒன்றைத் திறந்து வைக்கச் சென்றார். அச்சமயம் 200 சிப்பாய்கள் வரையில் செங்கலடிச் சந்திக்கு வந்து சேர்ந்தனர். அப்போது நடந்த மோதலில் ஒரு சிப்பாய் காயமடைந்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் தனியாட்சி அமைக்க உங்களுக்கு முதுகெலும்பு இல்லையா?

### தேவா கிளப்பிய கேள்வி

மட்டக்களப்பு, ஆகஸ்ட் 1

இணைப்பு வேண்டும் என்று கிழக்கு மாகாணத்தில் சிலர் கோருகின்றனர். கிழக்கு மாகாணத்தில் தனியாட்சி அமைக்க உங்களுக்கு முதுகெலும்பு இல்லையா? என்று அவர்களைப் பார்த்துக் கேட்கின்றேன்

இப்படிப் பேசினார், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யு. தேவநாயகம்.

செங்கலடியில் நிறுவப்பட்ட புதிய தபால் நிலையக் கட்டடத்தைத் திறந்து வைத்த பின்னர் நடந்த வைபவத்தில் அமைச்சர் பேசினார்.

அப்போதே அந்தக் கேள்வியை அவர் எழுப்பினார்.

அமைச்சரை செங்கலடி தபால் அதிபர் திரு எஸ் தர்மராஜன் மாலை அணிவித்து வரவேற்றார்.

மாவட்ட தபால் அத்தியட்சகர் திரு கி. கனகசுந்தரம் தலைமை வகித்தார்.

அமைச்சர் மேலும் சொன்னதாவது;

கிழக்கு மாகாணம் தனித்துவமான பிரதேசம். அது முன்னேற்றம் காண இணைப்போ அல்லது துணையோ தேவை இல்லை

வடக்கு தனித்து இயங்கட்டும். அங்கு 90 சதவீதமானவர் தமிழர். கிழக்கு அப்படி அல்லவே. மூன்று இனத்தவர்களும் வாழும் மாகாணம் இது —

— இப்படி அமைச்சர் சொன்னார். (உ-எ-21)

## மன்னாரில் ஹர்த்தால்

யாழ்ப்பாணம், ஆக 1

மன்னாரில் முஸ்லிம்கள் இன்று ஹர்த்தால் அனுஷ்டிக்கின்றனர்.

கடந்த 24 ஆம் திகதி வவுனியா பூனாவை என்ற இடத்தில் நடந்த பஸ் குண்டு வெடிப்பில் இறந்த "ஜிகாட்" முஸ்லிம் முன்னணியின் தலைவருக்கு அஞ்சலி செலுத்து முகமாகவே இந்த ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுகிறது.

(இ-10)

## வெங்கடேஸ்-பேர்னாட் சந்திப்பு

புதுடில்லி, ஜுலை 31

புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதர் பேர்னாட் திலகரத்தினா நேற்று புதன்கிழமை இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு ஏ பி வெங்கடேஸ்வரனைச் சந்தித்துப் பேசினார். (உ-எ)

## சுபநேரம்

01—08—1986
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:
6-03 முதல் 7-33 வரை
ராகுகாலம்:
10-33 முதல் 12-03வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
ஏகாதசி விரதம்

## வடக்கிற்கு புதிதாக இணைப்பதிகாரி, தளபதி

கொழும்பு, ஆகஸ்ட் 1

வடபகுதியின் புதிய இணைப்பதிகாரியாக திரு. ஜெரி சில்வா நியமிக்கப்பட்டிருக்கிறார்.

வட பகுதியின் புதிய தளபதியாக திலக் பொன்னப்பெருமா நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்புதிய நியமனங்கள் அமுலுக்கு எப்போது வரும் என்பது பற்றி அறிவிக்கப்படவில்லை.

கடந்த திங்கள் இரவு யாழ் கோட்டை முகாம் மீது நடந்த தாக்குதலில் லெப்டினண்டும் சிப்பாயும் உயிரிழந்த பின்னர் வடபகுதிக்கு பாதுகாப்பு படை உயர் அதிகாரிகள் வந்து விசாரணை நடத்தினர்.

அதன் பின்னரே இப்புதிய நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன.

தற்போது வடபகுதி இணைப்பதிகாரியாக பிரிகேடியர் ரூபசிங்கவும் தளபதியாக சந்திரா அபயரத்தினவும் கடமை புரிகின்றனர்.

(ஐ-எ)

## மதவாச்சியில் லொறி எரிப்பு

### சாரதி, கிளீனர் கொலை

யாழ்ப்பாணம், ஆக 1

மதவாச்சியில் லொறி ஒன்று நேற்று எரிக்கப்பட்டது.

சாரதியும், கிளீனரும் சுட்டுக்கொலை செய்யப்பட்டு மதவாச்சி ஆஸ்பத்திரியில் சடலங்கள் வைக்கப்பட்டுள்ளன.

நேற்றுக்காலை மதவாச்சி வடாகச் சென்று கொண்டிருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த லொறி ஒன்றே எரிக்கப்பட்டது.

ஆயுதந் தாங்கிய கோஷ்டியினர் லொறியை மறித்து பூரண சோதனைக்குட்படுத்திய பின் சாரதியையும் கிளீனரையும் இறக்கிச் சுட்டனர்.

இதன் பின்னர் லொறியை தீ மூட்டி எரித்தனர் என்று தெரியவருறது. (இ-10-6)

## கரடிக்குளத்தில் 'ஹெலி' தாக்குதல்

யாழ்ப்பாணம், ஆக 1

வவுனியா கரடிக்குளத்தில் ஹெலிக்கொப்டரில் இருந்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது

சம்பவம் பற்றி அறியவருவதாவது.

புதன் கிழமை கச்சமடுப் பகுதியில் நடைபெற்ற நிலக்கண்ணி வெடிச்சம்பவத்தை அடுத்து இப்பகுதிக்கு விரைந்து சென்ற ஹெலிக்கொப்டர் ஒன்று குடிமக்கள் வாழும் பகுதிகளை நோக்கி குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டது.

இதனால் பத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் எனவும் சிலர் காயமடைந்திருக்கலாம் எனவும் அஞ்சப்படுகிறது

இச் சம்பவத்தை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சையை குழப்புவோருக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஆக 1

பரீட்சையைக் குழப்புவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழீழ விடுதலைப் புலிகள் அறிக்கை ஒன்றின் மூலம் எச்சரிக்கை விடுத்திருக்கின்றனர்.

கல்வி சீர்குலைய பல வேறு காரணங்கள் இருப்பினும் இவைப் பாழடிக்கும் சில தீயசக்திகளின் செயற்பாடுகளை அனுமதிக்க முடியாது.

எமது எதிர்காலத்தை— தமிழீழ விடுதலைப் போராட்டத்தை— தாரதரிசனத்தோடு நோக்காத தீய சக்திகளே எமது மாணவர்களின் கல்வியைச் சீரழிக்கின்றன. போராட்ட சூழ்நிலையில் கல்வி மிகமிக இன்றியமையாதது.

இன்று இடம் பெறும் பரீட்சையைக் குழப்பக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

பாதுகாப்புக் கவுன்ஸில் ஆராயும்

## யாழ். கோட்டை முகாம்: மக்கள் வெளியேறுவதா?

யாழ்ப்பாணம், ஆக 1

யாழ் கோட்டை இராணுவ முகாமில் இருந்து ஆயிரம் மீற்றர் சுற்றளவுக்குள் இருக்கும் சகல கட்டடங்களும் கைவிடப்பட்டு மக்கள் வெளியேறவேண்டும் என்ற பாதுகாப்புப்படை உயர் அதிகாரியின் வேண்டுகோள் குறித்து பாதுகாப்புக் கவுன்சிலின் வாராந்தரக் கூட்டத்தில் ஆராயப்பட இருப்பதாகத் தெரியவருகின்றது.

பாதுகாப்புக் கவுன்சிலின் அடுத்த வாராந்தரக்கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெற இருக்கிறது.

கடந்த திங்கட்கிழமை இரவு போராளிகளின் தாக்குதலில் யாழ் கோட்டை இராணுவ முகாமினுள் இருந்த ஒரு லெப்டினன்டும் சிப்பாய் ஒருவரும் இறந்தனர். பொறுப்பு அதிகாரியும் இன்னொருவரும் காயமடைந்தனர்.

இதைத் தொடர்ந்து பாதுகாப்பு உயர் அதிகாரிகள் பாதுகாப்பு அமைச்சருக்கு விடுத்த அவசர வேண்டுகோளில் ஆயிரம் மீட்டர் பிரதேசத்தில் சகல பொதுமக்களையும் வெளியேற்றுவிட்டால் அது ஆயுதப்படையினருக்குப் பெரும் ஆபத்தாக முடியும் என்று தெரிவித்துள்ளனர்.

அப்படிக் குடிமக்களை வெளியேற்றுவிட்டால் கோட்டை முகாமில் இருந்து இராணுவம் வெளியேறவேண்டி வரும்.

ஆயிரம் மீட்டர் எல்லைக்குள் இருந்தே நிர்வாகிகள் செயலகம்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வயாவிளானில் மீண்டும் மோதல்

### ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 1

வயாவிளானில் நேற்று மீண்டும் மோதல்கள் இடம்பெற்றன.

இதுசம்பந்தமாக ஈ.பி. ஆர். எல். எவ். விடுத்த அறிக்கை வருமாறு:—

நேற்று வியாழக்கிழமை பகல் 11 30 மணியளவில் வயாவிளான் இராணுவ முகாமிலிருந்து நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் வெளியேறிய போது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இராணுவப் பிரிவான மக்கள் விடுதலைப் படையினர் கடுமையாகப் போராடி சிறீலங்கா படைகளை விரட்டியடித்தனர்

மக்கள் விடுதலைப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதில் தாக்கு இராணுவத்தினரும் S S 85 ரக மோட்டார் தாக்குதலில் 10க்கும் மேற்பட்ட இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

மீண்டும் 2 மணியளவில் இராணுவத்தினர் வெளியேறியபோது மக்கள் விடுதலைப் படையின

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முனி



வயது போனவைக்குத்தான் சனப் பித்தம் சனம் வாதம் வாறதாக நினைச்சா இப்ப 50 வயது தாண்ட முன்னமே அந்த நோய் வந்து விடுகுதோ...

வவுனியாவில்

## புலிகளின் தாக்குதலில் பல கறுப்புச்சட்டையர் பலி

யாழ்ப்பாணம், ஆக .1

வவுனியாவில் கறுப்புச் சட்டைக்காரர் மீது பல இடங்களில் வைத்து தாம் நடத்திய தாக்குதலில் அவர்களில் பலர் உயிரிழந்ததாக தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

புதன் காலை 5 மணியளவில் வவுனியா முகாமிலிருந்து வந்த 200 க்கும் அதிகமான கறுப்புச் சட்டைக்காரர்கள் கிராமத்தைக் குலைத்து முற்றுகையிட்டனர்.

இம்முற்றுகையை அறிந்து வரச் சென்ற எமது போராளியான திரு. .. குமாரவேலில் கறுப்புச்சட்டைக் காரர்களினால் சுடப்பட்டார். அவரது சடலம் பின்னர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தீர்வு காண்பதில் தோல்வி அடைந்து விட்டோம்

### லலித் சொல்கிறார்

கொழும்பு, ஆகஸ்ட் 1

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணும் முயற்சியில் நாம வெற்றி கொள்ளவில்லை.

இப்படி தேசியப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி சொன்னார்.

கொழும்பு திருக்குடும்பக் கன்னியர் மடப் பாடசாலையில் நேற்று முன்தினம் (புதன்கிழமை) மாலை நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையில் அமைச்சர் மேற்கண்டவாறு சொன்னார்

இராணுவ நடவடிக்கைகள் மேலும் குழப்பத்தை ஏற்படுத்தும் அதனை வைத்து தீவிரவாதிகள் வென்று விடுவார்கள்.

யதார்த்த நிலையை உணர்ந்து ஏனைய நாடுகளில் நிலவும் அதிகாரப் பகிர்வு முறைகளைக் கையாண்டு இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் —

இப்படி அமைச்சர் சொன்னார். (ஐ-எ)

## வெளிநாட்டு செய்தியாளருக்கு பயமுறுத்தல்?

புதுடில்லி, ஜுலை 31

இந்திய சார்புக் கொள்கையுடன் இலங்கை இனப்பிரச்சினை பற்றிய செய்திகளை அனுப்புவதாகக் கொழும்பில் உள்ள பி பி ஸி செய்தியாளர் ஹம்ப்ரி ஹொக்ஸிலி உட்பட சில வெளிநாட்டுச் செய்தியாளர்கள் வெளியேற்றப்போவதாக இலங்கை பயமுறுத்துகின்றதாம்.

இப்படியான செய்திகள் புதுடில்லிக்குக் கிடைத்துள்ளதாக இந்தியாவின் பிரதம அரசியல் விமர்சகர் ஜி கே ரெட்டி எழுதியிருக்கிறார். (உ-ஐ-ஏ)

## மாகாண சபை யோசனை பேச்சுக்கு அடிப்படையாக இருக்க முடியாது

### பிரபா நிராகரிப்பு

சென்னை, ஜுலை 31

இலங்கை அரசின் மாகாண சபை யோசனைகள் பேச்சுக்கள் நடத்துவதற்கு ஒரு அடிப்படையாக இருக்க முடியாது.

தமிழீழ விடுதலைப்புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் மேற்கண்டவாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களிடம் திட்டவட்டமாக மீண்டும் வலியுறுத்தினார்

90 நிமிடப் பேச்சுக்களின்போது திரு வே பிரபாகரன் இதனைத் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பில் திரு. வே. பிரபாகரன் தலைமையில் திலகர், யோகி (யோ. நரேன்) ஆகியோர் கலந்துகொண்டனர்.

கூட்டணி சார்பில் திரு அமிர்தலிங்கம் தலைமையில் திரு. எம். சிவசிதம்பரம், திரு இரா. சம்பந்தன் திரு. வெ. யோகேஸ்வரன்; திரு வி ஆனந்தசங்கரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

(அ-ஐ-ஏ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பனங்காய்ப் பலகாரம் நினைத்தவுடன் உண்ணலாம்

### பனை அபி.சபை நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஆக 1

பனங்காய்ப் பலகாரத்தை மக்கள் விரும்பியபோது சில நிமிட நேரத்தில் தயாரித்து உண்ண பனை அபிவிருத்திச்சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

பனங்காய்ப் பலகாரம் செய்ய தேவைப்படும் பனம் பழரசம் பதனிடப்பட்டு போத்தலில் அடைக்கப்பட்டுள்ளது.

பரீட்சார்த்தமாக சற்பகம் கொழும்புக் கிளையில் விற்பனையான இது இப்போது சகல சற்பகம் கிளைகளிலும் விற்பனைக்கு விடப்பட்டுள்ளது. (இ-9)

## யாழ்.கூட்டுறவு கல்லூரி பயிற்சிவகுப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஆக 1

இலங்கை தேசியகூட்டுறவுச் சபையின் ஆதரவிலான யாழ்ப்பாணம் கூட்டுறவுப் பயிற்சிக்கல்லூரி, 3 வருடங்களாக இடை நிறுத்தி வைக்கப்பட்ட பயிற்சி வகுப்புக்களை மீண்டும் ஆரம்பித்துள்ளது.

தேசியக் கூட்டுறவுச் சபையின் தலைமை அலுவலகத்தினால் இப்பயிற்சி வகுப்புக்கள் முன்னர் இடைநிறுத்தி வைக்கப்பட்டன.

இதனை யாழ் கூட்டுறவு தேசிய சபை ஆட்சேபித்து இருந்தது. கூட்டுறவாளர்களும் இது சம்பந்தமாக முறையிட்டிருந்தனர்.

ஜீ சி ஈ.சாதாரணதரம் உயர்தரம் ஆகிய பரீட்சைகளில் சித்தியடைந்து வேலையற்றிருக்கும் இளைஞர்களும் யுவதிகளும் இரண்டு பயிற்சிகளிலும் சேர்ந்து கொள்ளலாம் என்று கூட்டுறவுப் பயிற்சிக்கல்லூரிப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (இ-ஏ)

# பம்பாய் வெங்காயம் ப.நோ.கூ.ச. மூலம் விநியோகம்

யாழ்ப்பாணம், ஆக.1

யாழ் மாவட்ட பம்பாய்வெங்காய உற்பத்தி முழுவதையும் விவசாயிகளிடம் இருந்து விலைக்கு வாங்கி சந்தைப்படுத்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் முன்வந்துள்ளன.

போக்குவரத்துப் பிரச்சினை காரணமாகப்பாதிப்படைந்துள்ள பம்பாய் வெங்காய உற்பத்தியாளர்களுக்கு உதவும் முகமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அராலியில் பம்பாய் வெங்காய உற்பத்தியாளர் கூட்டத்தில் இப்பிரச்சினை ஆராயப்பட்டது.

யாழ் மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளர் திரு எஸ் கிருஷ்ணபிள்ளை இக் கூட்டத்தில் பிரசன்னமாயிருந்தார்.

இவ்வாரம் கொழும்பிலிருந்து கப்பலில் வரவுள்ள உரமும் ப.நோ.கூ. சங்கங்கள் மூலமே விநியோகிக்கப்படும். (இ-5-9)

## செட்டிகுளம் அகதிகள் உதவியின்றி தவிப்பு

யாழ்ப்பாணம், ஆக 1

செட்டிகுளத்திலிருந்து அகதிகளாக வவுனியா போன்ற இடங்களுக்குச் சென்ற அகதிகள் இப்போது உதவியின்றி தவிக்கிறார்கள்.

இவர்களை மீண்டும் செட்டிகுளத்துக்கே செல்லுமாறு பணிக்கப்பட்டிருக்கிறது.

இவர்களில் 11 பேர் பாவற்குளம் அசம்பாவிதங்களின்போது இறந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

# அமரதாசவின் மரணம் தமிழ் இலக்கிய உலகுக்கு ஒரு பேரிழப்பு

### அஞ்சலிக் கூட்டத்தில் நந்தி

யாழ்ப்பாணம், ஆக. 1

தமிழ் மக்களைப் புரிந்துணர்வுடன் நோக்கி வரும், தமிழ் இலக்கியப் படைப்புகளை சிங்களத்திலும் சிங்கள ஆக்கங்களைத் தமிழிலும் மொழிபெயர்த்தவருமான சிங்கள இலக்கிய கர்த்தா திரு. கே ஜி அமரதாசவின் மரணம் தமிழ் இலக்கிய உலகுக்கு ஒரு பேரிழப்பு

சிங்கள இலக்கிய எழுத்தாளரான திரு. கே. ஜி. அமரதாசவின் மரணம் தொடர்பாக யாழ் நகுலினி மண்டபத்தில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் தலைமையுரை ஆற்றிய பேராசிரியர் நந்தி இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சு. வித்தியானந்தன் பேசுகையில்,

இரண்டு இனங்களுக்கும் இடையில் சந்தேகம் வளர்ந்துள்ள இக்கால கட்டத்திலும், தமிழ் இலக்கியத்தின்பால் தமிழ் எழுத்தாளர்பால் மதிப்பும் அன்பும் காட்டிய சிங்கள எழுத்தாளர் திரு. அமரதாச என்றார்

நாவலாசிரியர் இணுவையூர் சி திருச்செந்திநாதன் பேசுகையில், தமிழில் நான் எழுதிய அகதிகள் முகாம் என்ற கதையைச் சிங்களத்தில் மொழிபெயர்த்து எமது உணர்வுகளை அவர்கள் அறியச் செய்த நல்லவர் அமரதாச என்றார்.

கவிஞர் இ.முருகையன் பேசுகையில் சாகித்திய மண்டலத்தின் அரசாங்க அதிகாரியாக இருந்த போதும் தமிழில் கடிதம் அனுப்பி, தமிழிலேயே கையெழுத்தும் இடும் மரபு காத்தவர் திரு. அமரதாச என்றார்-

"மல்லிகை" ஆசிரியர் திரு டொமினிக் ஜீவா பேசுகையில், தான் சிங்களத்தில் மொழிபெயர்த்த தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளை நூலாக அச்சிட்டு யாழ்ப்பாணம் கொண்டு வந்து வெளியீட்டுவிழா நடத்த வேண்டும் என்று கடமையாக விரும்பியவர் அமரதாச என்றார்.

திரு அமரதாசவின் மறைவுக்கு கவலை தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றும் கலகினையில் உள்ள அவரது இல்லத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

தமிழ் எழுத்தாளர்களினது அபிமானத்தைப் பெற்றவர் திரு. அமரதாச. சிங்கள — தமிழ் எழுத்தாளர்களிடையே தமது புரிந்துணர்வு மூலம் இலக்கியப் பாலமாக அவர் செயற்பட்டார்

பல தமிழ் எழுத்தாளர்களை தனது அன்பான நெருக்கத்தின் மூலம் நண்பர்களாக அவர் பெற்றிருந்தார் என்று தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (இ 9)

# மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

# கிளிநொச்சி: அறுவடை பாதிக்கப்படும் அபாயம்

## இடம் பெயர்ந்த விவசாயிகள் திரும்பிச் செல்வதற்கு அச்சம்

யாழ்ப்பாணம், ஆக 1

கிளிநொச்சியிலிருந்து அண்மையில்நடைபெற்ற அசம்பாவிதங்களால் 6 ஆயிரம் பேர்வரை இடம் பெயர்ந்துள்ளதால் விவசாய அறுவடைகள் பெருமளவு பாதிக்கப்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்தோரில் 80 ஆயிரம் பேர் அயல் மாவட்டங்களுக்குச்சென்றுள்ளனர். தற்போதைய சூழ்நிலையில் இவர்கள் கிளிநொச்சி திரும்பிச் செல்ல அஞ்சுகின்றனர்.

இந்த அகதிகளுக்கான எந்தவித உணவு உதவிகளும் அரசாங்கத்தால் வழங்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

மேலும் இந்த வருடம் கிளிநொச்சியில் வேளாண்மை நன்கு விளைந்துள்ளது.

இச்சூழ்நிலையில் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள அறுவடை வேலைகளையிட்டு பொதுமக்கள், பிரஜைகள் குழுக்கள், நிறுபோகக்காரர்கள்பெரிதும் கவலை கொண்டுள்ளனர் (இ-5)

## திருநெல்வேலி விவசாயப் பண்ணையில் பொருள்கள் கொள்ளை

யாழ்ப்பாணம், ஆக 1

யாழ்ப்பாணம் திருநெல்வேலி அரச விவசாயப் பண்ணையிலிருந்து ரூபா 30 000 பெறுமதியான பயிற்சிப் பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

திங்கட்கிழமை இரவு நடந்த இக் கொள்ளை பற்றி பண்ணை முகாமையாளரும், பயிற்சி உத்தியோகத்தரும் உயர் அதிகாரிகளுக்கு முறையீடு செய்துள்ளனர்.

லொறி ஒன்றில் வந்த ஆயுதம் தாங்கிய பத்துப் பேர் காவலாளியை துப்பாக்கி முனையில் நிறுத்திவிட்டு இக்கொள்ளையை நடத்தினர்.

பண்ணையின் களஞ்சியத்தை உடைத்து அதனுள் இருந்த பயிற்சிக்குப் பாவிக்கப்படும் பல பொருள்களை இக் கோஷ்டியினர் கொள்ளை அடித்துச் சென்றனர்.

இரண்டு சில்லு உழவு இயந்திரத்தில் பாவிக்கும் முட்கலப்பை, கோழிக் கூட்டுக்குப் பாவிக்கும் கம்பிவலை, தச்சுவேலைகளுக்குப் பாவிக்கும் ஆயுதங்கள், ஒரு பரல் டீசல், விதைப்புக்குரிய பொருள்கள், விதைவகைகள் ஆகியவை கொள்ளை போன பொருட்களுள் அடங்கும்.

பயிற்சிக்கென அரசாங்கத்தால் வழங்கப்படும் மானியத்தைத் தொடர்ந்து பெற முடியாத நிலை ஏற்படலாம் எனவும். தொடர்ந்து பயிற்சி நடத்த அனுமதி பெறுவது சிரமமாக இருக்குமெனவும், இங்குவேலை செய்யும் தொழிலாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வழங்க முடியாத கஷ்டநிலை ஏற்பட்டுள்ளதாகவும், இப் பண்ணை முகாமையாளர் திரு. பி தருமலிங்கம், பயிற்சி உத்தியோகத்தர் திரு. பி. இராமநாதன் ஆகியோர் கவலை தெரிவித்தனர்.

தற்பொழுது இப் பயிற்சி நிலையத்தில் முப்பது பெண்கள் பயிற்சி பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (இ)


யாழ் நகர மக்களுக்கு!

அரிய சந்தர்ப்பம்!!

**உதயனின் உதய சேவை**

விநியோகம் இலவசம்!!!

அதிகாலையில் கடைக்குப் போய் பத்திரிகை வாங்க நேரத்தைச் செலவிடாதீர்!

உதயனின் உதய சேவையில் பதிவு செய்து வீட்டில் இருந்தவாறே உதயன், சஞ்சீவி படிக்கலாம். உடன் சந்தாதாரராகுங்கள்!

யாழ் மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு அதிகாலையில் வீடுகளுக்குப் பத்திரிகைகளை விநியோகிக்கும் இலவச சேவையை நாம் ஆரம்பித்துவிட்டோம்.

நீங்களும் சந்தாதாரராகிப் பதிவு செய்தால் வீண் சிரமமின்றி உதயனையும் சஞ்சீவியையும் வீட்டில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு கொள்ளுங்கள்!

விநியோகப் பகுதி,
'உதயன்',
த.பெ. எண். 23.
யாழ்ப்பாணம்


## மக்கள் முகம்

### இணக்க சபை

சாவகச்சேரி, ஆக 1

மட்டுவில்—நுணாவில் கிராமசேவகர் பிரிவிற்கான இணக்கசபைத் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

பண்டிதர் திரு. செ. சிவலிங்கம் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

திரு க. வெற்றிவேலு உபதலைவராகவும், திரு. கே. எஸ் சண்முகலிங்கம் செயலாளராகவும் திரு த. அப்புத்துரை உபசெயலாளராகவும் தெரிவாகினர்.

மேலும் மூவர் சபை உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். (இ-31)

### விழிப்புக் குழு

வேலணை, ஆக. 1

மண்டைதீவில் விழிப்புக்குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் தலைவராக திரு. கே. சிவகுலதிலகசிகமும், செயலாளராக திரு செ. அ. தேவராசாவும், பொருளாளராக திரு. இ தில்லைநாதனும் தெரிவு செய்யப்பட்டனர்.

17 பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (இ)

### சைவசமய அபிருத்திக் கழக நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், ஆக. 1

யாழ் நாயன்மார்கட்டு சைவ சமய அபிவிருத்திக் கழக நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள்:- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், திரு.ச. பொ. பாலசிங்கம் (உ. அ.அ. யாழ்ப்பாணம்) திரு க.மகேசன் (கல்வி அதிகாரி யாழ்ப்பாணம்) திரு இ. சரவணமுத்து(பொருளாளர் அம்பாள் ஆலய பரிபாலன சபை)

தலைவர்:- திரு. க. சொக்கலிங்கம்.

உப தலைவர்:- திரு. இ. கமலநாதன். திரு. கா. இரகுநாதன்.

இணைச் செயலாளர்கள்:- திரு. ப. மகேந்திரதாசன், திரு. மு. யோகராசா.

பொருளாளர்:- திரு. சி. இராசேந்திரம்.

நிர்வாகசபை உறுப்பினர்களாக பத்துப் பேர் தெரிவு செய்யப்பட்டனர். (இ)

## உணவு முத்திரை அடுத்த வாரம் வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஆக 1

யாழ் மாவட்டத்தில் அடுத்த வாரம் உணவு முத்திரைகள் வழங்குவதற்கான நடவடிக்கைகளை யாழ் உணவுத் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

இதுவரை உணவு முத்திரை வழங்கப்படாத உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் அடுத்த வாரம் முதல் உணவு முத்திரைகளை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதுவரை வழங்கப்படாதிருந்த உணவுப் பொருள்களையும் இப் புதிய உணவு முத்திரைகள் மூலம் பெறுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளதாக உணவுக் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

அரசாங்க உணவு முத்திரையை நம்பி இருந்த பல்லாயிரக்கணக்கான யாழ் மாவட்ட மக்கள் கடந்த இரண்டு மாதங்களாக உணவுப் பொருள்களைப் பெறமுடியாது கஷ்டங்களை அனுபவித்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால் இதுவரை வழங்கப்படாத உணவுப் பொருள்களையும் இந்த புதிய உணவு முத்திரையில் பெறத்தக்க வசதிகளை உணவுத் திணைக்களம் செய்துள்ளதாகத் தெரியவருகிறது. (இ)

## கம்பன் விழா இன்று ஆரம்பமாகின்றது

யாழ்ப்பாணம், ஆக 1

அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் கம்பன் விழா இன்று ஆரம்பமாகின்றது.

இன்றைய முதல்நாள் நிகழ்ச்சிகள் கலாநிதி இ. பாலசுந்தரம் தலைமையில் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும்.

மாலை 4 30 மணிக்கு இணுவில் கே ஆர் சுந்தரமூர்த்தி குழுவினரின் மங்கல இசையுடன் விழா ஆரம்பமாகும்.

5. 30 மணிக்கு திரு. க. இளசிகாமணி மங்கல விளக்கேற்றுவார்.

அதைத் தொடர்ந்து அமைப்பாளர் இ. ஜெயராஜ் வரவேற்புரை நிகழ்த்துவார்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார்.

6.00 மணிக்கு திரு. க. சிவராமலிங்கம் தலைமையில் பட்டிமன்றம் நடைபெறும்.

"இன்றைய சூழலில் எம்மவரை வழிப்படுத்துவதில் முதன்மை பெறும் இலக்கியம்" எனும் தலைப்பில், இராமாயணம், மகாபாரதம், சிலப்பதிகாரம் என்பவற்றை முன்வைத்து பட்டிமன்றம் நடைபெறும்.

இதில் திரு க சிவலிங்கராஜா, திரு வி. ரி. சிவகுமாரன், திரு க. நாகேஸ்வரன், திரு. ந. கணேசமூர்த்தி, திரு.மா. வேதநாதன், திரு இ.திருநந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்வார்கள். (இ-5)

## கூட்டுறவு உதவிஆணையாளர் பிரிவுபசாரம்

யாழ்ப்பாணம், ஆக. 1

கூட்டுறவுத் திணைக்களத்தில் கண்ணியமும் கடமையுணர்வும் மிக்க அதிகாரியாகக் கடமையாற்றியதுடன் திணைக்களத்தில் சங்கங்கள் தொடர்பான சகல பிரச்சினைகளுக்கும் துணிச்சலாக முகங் கொடுத்த அதிகாரியாக திரு. சந்தையா திகழ்ந்தார்.

ஓய்வுபெற்ற கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எம். சந்தையாவுக்கு கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பில் பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது.

அதில் தலைமை வகித்துப் பேசிய சங்கத் தலைவர் திரு. எஸ். சிதம்பரப்பிள்ளை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. சி. சிவமகாராசா, கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. இ. ஐயாத்துரை, கூட்டுறவுத் திணைக்களப் பரிசோதகர்கள் திரு. பொ. கந்தையா திரு பொ. துரையப்பா, கட்டைவேலிக் கிளைக் குழு சார்பாக திரு சி. சிதம்பரநாதன், பெருமன்றத்தின் அமைப்பாளர் திரு நெல்லை க. பேரன், இயக்குநர்சபை உப தலைவர் திரு. செ சுதானந்தன், வர்த்தக முகாமையாளர் திரு. சோ. சிவபாதம் ஆகியோரும் பேசினர்.

சங்கத்தின் பொது முகாமையாளர் திரு ஆ. பி. த. கந்தையா நன்றியுரை கூறினார். (இ)

## ஆசிரியர் தொழில் இக்கட்டானதொன்றாக தற்போது மாறி வருகிறது

புங்குடுதீவு, ஆக 1

ஆசிரியர் தொழில் இன்று மிகஇக்கட்டான, நெருக்கடியான ஒரு தொழிலாக மாறி வருகிறது பல்வேறு பிரச்சினைகளை, கஷ்டங்களை ஆசிரியர்கள் எதிர்நோக்க நேரிடுகிறது

புங்குடுதீவு மேற்கு அ.மி.த.க. பாடசாலை அதிபர் திரு சு. யோ. பூராசா மேற்கண்டவாறு கூறினார்.

புங்குடுதீவு குறிகாட்டுவான் அரசினர் தமிழ் வித்தியாலயத்தின் அதிபராகப் பணியாற்றி அண்மையில் ஓய்வு பெற்ற திரு சி. இரத்தினசபாபதிக்கு பிரஸ்தாப வித்தியாலயப்பெற்றோர்கள், மாணவர்கள் பழைய மாணவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து சேவைநலம் பாராட்டுபசாரமொன்றை அளித்தனர்.

வைபவத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே திரு. பூராசா மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து பேசுகையில் குறிகாட்டுவான் கிராம மக்களின் உள்ளங்களில் திரு இரத்தினசபாபதிக்கு என்றும் இடமுண்டு என்றார்

புங்குடுதீவு மகாவித்தியாலய உபஅதிபர் திரு. க.செல்வரத்தினம் பேசுகையில் ஓய்வு பெற்ற அதிபர் திரு. இரத்தினசபாபதி சிறந்த செயல் வீரர் என்றும், அவரது பணிகளை மக்கள் என்றும் நன்றியுடன் போற்றுவர் என்றும் கூறினார்.

ஆசிரியர் திரு. நா. தருமலிங்கம், செல்வி ஐ சத்தியபாமா, திரு. ஆ. நடேசமூர்த்தி ஆகியோர் உட்பட மற்றும் பலரும் பேசினர்

வித்தியாலய புதிய அதிபர் திரு. த. தவராசா தலைமையில் வைபவம் நடைபெற்றது (இ-131)


### எங்கள்சேவை

**சேவை**

எம்மிடம் பலவகையான மணமக்கள் உண்டு. தீர்தகெதியில் விவாகம் நிறைவேற்றுவோம். மாவை விநாயகர் மங்கள ஏஜன்சி, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை. கிளை: 52/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**விற்பனைக்கு**

விசுவாண்டிப் பிள்ளையார் கோயில் முன்பாகவுள்ள ஒழுங்கையில் 4 பரப்புக் காணி ரூபா 60.000 ஆக விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும்: நாகராசா, No 8, 5ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.


## மின் தடை

### இலங்கை மின்சார சபையின் முக்கிய அறிவித்தல்

1986-08-03ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 00 மணி முதல் மாலை 4-00 மணி வரை சுன்னாகத்தில் அமைந்திருக்கும் பாரிய உப-மின் நிலையத்தில் அவசர திருத்த வேலை காரணமாக சுன்னாகம், காங்கேசன்துறை, வட்டுக்கோட்டை, வேலணை, பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய மின் அத்தியட்சகர்களின் பகுதிகளுக்கும், யாழ். மாநகர சபை எல்லைக்குள் அமைந்திருக்கும் பல உப-மின் நிலையங்களுக்கும் மின் விநியோகத் தடை ஏற்படும் என சகல மின் பாவனையாளர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

இம் மின் தடையால் பாதிப்புறும் சகல மின் நுகர்வோரிடமிருந்து அவர்களுக்கு ஏற்படும் வசதியீனங்களுக்காக இலங்கை மின்சார சபை தனது மனவருத்தத்தை தெரிவித்துக்கொள்கின்றது.

இப்படிக்கு,
மின் பொறியியலாளர்,
யாழ். பிரதேச அலுவலகம்
இலங்கை மின்சார சபை,
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

குன்றென நிமிர்ந்து நில். கூடித் தொழில் செய்

—மகாகவி பாரதி.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல 15 2வது ஒழுங்கை தொலைபேசி 24805
மின்சார நிலைய வீதி 22073
யாழ்ப்பாணம், 01-08-86 த பெ 23


## தெற்கிலிருந்து கேட்கும் பழைய பல்லவி!

அரசின் உத்தேச மாகாண சபைத் திட்டத்திற்குத் தெற்கில் பலத்த எதிர்ப்புக் கிளம்பி இருக்கிறது.

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முயற்சிகள் முன்னரும் பல தடவைகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வேளைகளில் எதிர்ப்புகள் கிளம்பி முயற்சிகள் தோல்வியில் முடிந்தன.

தமிழர் தரப்பில் மட்டுமன்றி, சிங்களவர் தரப்பிலும் உயிர்ச் சேதங்கள், உடைமைச் சேதங்கள் நடந்த பின்னர் இப்போதைய தீர்வு முயற்சி நடந்து கொண்டிருக்கிறது.

உரிமைகளை இழந்தவர்களாக மட்டுமன்றி ஆயிரக்கணக்கான உயிர்களைப் பறிகொடுத்து பெருமளவில் நிர்க்கதிக்கு ஆளாகி இருப்பவர்களும், பாதிக்கப்பட்டிருப்பவர்களும் தமிழர்கள் என்பதை எவரும் மறந்துவிடலாகாது.

அரசின் உத்தேச மாகாண சபையைத் தமிழ் மக்கள் இன்னும் ஏற்கவில்லை; தமிழ்த் தலைவர்களும் ஏற்கவில்லை. விடுதலைப் போராளிகளும் ஏற்கவில்லை. அப்படியே ஏற்கவும் முடியாது.

அடுத்த பக்கத்தில், மாகாண சபைத் திட்டம் இன்னமும் கரு நிலையிலேயே இருக்கிறது. அதற்கான நகல் சட்டம் கூடத் தயாராகவில்லை. ஆனால் தெற்கில் எதிர்ப்பு "எக்கச்சக்கமாக" வலுத்து வருகிறது.

முந்திய அதே பழைய பல்லவிதான் மீண்டும் தெற்கிலிருந்து கேட்கிறது. நாட்டில் இத்தனை பாதிப்புகள் ஏற்பட்ட பின்னரும் அங்கிருந்து கிளம்பும் எதிர்ப்பு பழைய மாதிரியே இருக்கிறது.

அதே பழைய பாணி; அதே சாயல்; அதே தொனி சற்றும் வித்தியாசம் இல்லை. நாடு தமிழர்களுக்கு விற்கப்படப் போகிறது. மலையகத்திலும் தமிழ் ஈழம் உருவாகப்போகிறது. அதே பழைய கதை. அதே நோக்கம் — கருவிலேயே இதனை அழித்து விட வேண்டும் என்ற நோக்கம்.

இது எதனைப் புலப்படுத்துகிறது? தமிழர்களுக்கு உரிமை வழங்க வேண்டும், அவர்களும் இந்த நாட்டில் தன்மானம் உள்ள, கௌரவமான, சம பிரஜைகளாக வாழ வேண்டும், தமது மொழி, கலாசாரத் தனித்துவத்தைப் பேணிச் சுதந்திர மனிதர்களாக வாழ வேண்டும் என்ற விருப்பம் சிங்களவர்கள் மனதில் இன்னமும் பிறக்கவில்லை.

தேசநலனுடன் நோக்கி, தமிழர்களைத் தமது சகோதரர்கள் போலக் கருதி, சமாதான சகவாழ்வு வாழ வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இப்போதும் உதிக்கவில்லை.

தாங்கள் ஆளுபவர்களாகவும், தமிழர்கள் ஆளப்படுபவர்களாகவும் இருக்கத் தமது தயவில் அவர்கள் வாழ்ந்து, தாம் கொடுப்பதை ஏற்று இரந்து பெற்றுத் திருப்தி அடைய வேண்டும் என்று நினைக்கிறார்கள் தாம் பெரும்பான்மையினர் - ஆகையினால் தமிழர்கள் தமது கொத்தடிமைகளாக இருக்கவேண்டும் என்று விரும்புகிறார்கள்.

இல்லையேல் 1957 இல் 1965 இல் வந்த அதே பாணியிலான எதிர்ப்பு இப்போதும் வந்திருக்குமா? நாட்டில் சமாதானம் நிலவி, எல்லோரும் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழ வேண்டும் என நினைத்திருந்தால் பழைய பல்லவி மீண்டும் ஒலிக்குமா?

தங்கள் தரப்பிலும் இத்தனை கஷ்ட, நஷ்டங்கள் ஏற்பட்ட பின்னர், தமிழர் உரிமைகளை வழங்க வேண்டும் என்ற நல்லெண்ணம் சிங்களவர்களுக்கு ஏற்படவில்லை அப்படித் தாராள மனசு ஏற்பட்டிருப்பின் அரசியல் வாதிகளையும், மதகுருமார்களையும் தூக்கி எறிய வெகுநேரம் பிடிக்காது. சிங்களப் பொதுமக்களின் சக்தி திரண்டால் அவர்கள் எல்லோரும் எம்மாத்திரம்?

மாகாண சபை தமிழர்களைப் பொறுத்த வரை எதனையும் தரப்போவதில்லை. மாவட்ட சபை என்ற மோதகம், மாகாண சபை என்ற கொழுக்கட்டை ஆகிறது. வெளித்தோற்றம் தான் புதியது, உள்ளுடல் பழையதே!

தமிழர் தாயகத்தைக் கொண்ட பிரதேச பூரண சுயாட்சி என்றாலாவது சற்று வித்தியாசமானது என்று சொல்லலாம்.

மாகாண சபையையே எதிர்க்கும் சிங்களவர்கள், பிரதேச சுயாட்சிக்கா ஒத்துக்கொள்ளப் போகிறார்கள்?

இந்தக் கஷ்டமான கேள்விக்கு விடை? இலங்கையில், இனப்பிரச்சினைக்கு இணக்கமான தீர்வு காணுவது அசாத்தியம் என்பதையே தென்னிலங்கைப் போக்கு வெட்ட வெளிச்சமாக்குகிறது.

தமிழர்களின் நிலையை அவர்கள் தனித்தே தீர்மானித்துச் செயலாக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிற்கு மேலும் நெருங்கச் செய்கிறார்கள் தென்னிலங்கையர்கள். அல்லவா?

## முத்துமாரி அம்மன் மஹோற்சவம்

புங்குடுதீவு, ஆக. 1

புங்குடுதீவு பெருங்காடு ஸ்ரீ முத்துமாரியம்மன் வருடாந்த மஹோற்சவம் இம் மாதம் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

சிவாகம கலாபமணி சிவஸ்ரீ தி. ச. பாலசுப்பிரமணியக் குருக்கள் கொடியேற்றக் கிரியைகளை நடத்துவார். தொடர்ந்து 11 தினங்களுக்கு இங்கு உற்சவங்கள் நிகழவுள்ளன.

இம் மாதம் 18 ஆம் 19 ஆம் 20 ஆம் திகதிகளில் தேர், தீர்த்த, பூங்காவனத் திருவிழாக்கள் நடைபெறும்.

8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆடிப்பூர விழா நடைபெறும். (இ-131)

## வெளி உலகில்

### அ. தி. மு. கவிற்கு காங்கிரஸ் ஆதரவு

தமிழ்நாட்டில் இரண்டு தொகுதிகளில் நடைபெறவுள்ள இடைத்தேர்தல்களில் அ. தி. மு. க. வேட்பாளர்களை காங்கிரஸ்(ஐ) கட்சி ஆதரிக்கும்.

### நிவாரணப்பணி

இந்தியாவின் தென் மாநிலங்களில் வரட்சி நிவாரண வேலைகளும் வட மாநிலங்களில் வெள்ள நிவாரண பணிகளும் நடைபெற்றுவருகின்றன.

### மசோதா நிறைவேறியது

பொது நலன்களைக் கருதி எந்தவொரு விசாரணைக்கமிஷனதும் அறிக்கைகளையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்காமல் நிறுத்தி வைக்கும் மசோதாவொன்று டில்லி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

### ஊடுருவல் மறுப்பு

அருணாசல பிரதேசத்தில் கடந்த திங்கட்கிழமை மூன்று சீனத்துருப்புக்கள் ஊடுருவல் செய்ததாக வெளிவந்த செய்திகளை இந்திய பாதுகாப்பு அமைச்சு மறுத்துள்ளது.

### ஸ்தாபனம் வேண்டுகோள்

மிகவும் கடுமையான அதேநேரத்தில் கட்டாயம் அமுல்படுத்தப்படக் கூடிய நடவடிக்கைகள் தென் ஆபிரிக்கா மீது எடுக்கப்படல் வேண்டும் என்று ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனம் அடிஸ் அபாபாவில் தெரிவித்துள்ளது.

### தீர்ப்புக்கு எதிர்ப்பு

உலக நீதி சபையால் நிக்கரகுவா அரசுக்கு சாதகமாக வழங்கப்பட்ட தீர்ப்பை அதன் அயல் நாடான கொண்டுராஸும் எதிர்த்து அமெரிக்காவிற்கு ஆதரவாக நடக்கத் தீர்மானித்துள்ளது.

### ஜமேக்காவில் கலவரம்

ஜமேக்காவில் நடந்து முடிந்த தேர்தல்களில் எதிர்கட்சிக் பெருவெற்றியீட்டியதைத் தொடர்ந்து கலவரங்களும் வன்செயல்களும் தலைதூக்கியுள்ளன.

### ஸ்பெயினுக்கு பிரான்ஸ் உதவும்

ஸ்பெயினில் பிரிவினைவாதிகளால் ஏற்படும் பாதிப்புக்களுக்கு முடிவு கட்ட பிரான்ஸ் உதவும் என இருநாட்டு வெளியுறவு அமைச்சர்கள் சந்தித்த பொழுது தெரிவிக்கப்பட்டது.

### கப்பலில் நெருப்பு

பகாமாஸ் தீவுகளுக்கு அருகே சென்று கொண்டிருந்த கப்பலொன்று தீப்பிடித்ததில் பயணிகள் அனைவரும் உயிர்காக்கும் படகுகளில் வெளியேறினர்.

(இ-ஒ)

### ரொங்சின் ரஷ்யாவில்

வியட்நாம் ஜனாதிபதி ரொங்சின் பதவி ஏற்ற இருவாரங்களுக்குள் ரஷ்யா பயணமாகியுள்ளார்.

# இந்திய - பாக் ரயில் சேவையை மீண்டும் ஆரம்பிக்க முயற்சி

புதுடில்லி, ஜூலை 31

இந்தியாவும் பாகிஸ்தானும் தமது எல்லைகளுக்கூடாகச் செல்லும் ரயில் சேவையை மீண்டும் ஆரம்பிப்பது பற்றிய பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவிருக்கின்றன.

இரு நாடுகளுக்கிடையிலான யுத்தம் காரணமாக இருபத்தியொரு வருடங்களுக்கு முன்னர் இச் சேவை ரத்துச் செய்யப்பட்டது.

இந்த ரயில் பாதை ஜம்மு காஷ்மீர் மாநிலத்தினூடாக 1965 ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்தியாவையும் பாகிஸ்தானையும் இணைத்திருந்தது.

இந்த ரயில் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று பூட்டோ கோரிவந்த பொழுதும் பாதுகாப்பு நடவடிக்கைகள் காரணமாக இந்திய பாதுகாப்பு அமைச்சு அப்போது இதனை நிராகரித்திருந்தது. (இ-ஒ)

## ஆயுதக் கட்டுப்பாடு பேச்சுக்கள் முடிவு

ஜெனிவா, ஜூலை 31

இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த ஆயுதங்களைக் கட்டுப்படுத்தக்கோரும் ஒப்பந்தம் குறித்து அமெரிக்காவிற்கும் ரஷ்யாவுக்கும் இடையே ஜெனிவாவில் நடைபெற்ற சிறப்புப் பேச்சுவார்த்தைகள் முடிவடைந்தன.

புதிய ஒப்பந்தம் ஒன்று உருவாகும்வரை ஆயுதக் கட்டுப்பட்டை இரு நாடுகளும் கடைப்பிடிப்பதான இடைக்கால ஏற்பாட்டை ரஷ்யா நிராகரித்துவிட்டதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். (ஒ)

## ஆபிரிக்க காங்கிரஸுடன் றேகன் நிர்வாகம் சந்திப்பு

லூசாக்கா, ஜூலை 31

அமெரிக்காவின் ஸாம்பிய தூதுவரான போல் ஹாயர் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் பிரதிநிதிகளை ஸாம்பியாவில் சந்தித்து உரையாடினார்.

தடைசெய்யப்பட்ட ஆபிரிக்க தேசிய காங்கிரஸுடன் ஜனாதிபதி றேகனின் நிர்வாகத்திலுள்ள அமெரிக்க ராஜதந்திரி பேச்சுவார்த்தை நடத்துவது இதுவே முதல் தடவையாகும்.

தென் ஆபிரிக்கா மீது அமெரிக்கா கடைப்பிடித்து வரும் கொள்கைகள் மாற்றம் காண்பதற்கு அறிகுறியாக இப் பேச்சுவார்த்தைகள் அமைந்திருந்தன என தேசிய காங்கிரஸ் பிரமுகர் தெரிவித்தார். (ஒ)

## ம. பொ. சி சந்தித்தார்

சென்னை, ஜூலை. 31

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் மத்திய, மாநில அரசுகள் ஆற்றி வரும் பணிகள் பற்றி அமெரிக்காவில் வசிக்கும் தமிழர்களிடம் விரிவாக எடுத்துச் சொல்வதற்கு சாதகமாக இந்தப் பயணம் அமைந்தது.

இவ்வாறு அமெரிக்காவில் ஒரு மாதகால சுற்றுப் பயணத்தின் பின் சென்னை திரும்பிய தமிழ் நாடு சட்ட மேலவைத் தலைவர் திரு. ம. பொ. சிவஞான கிராமணியார் தெரிவித்தார். (ஒ)

## திருத்தப்பட்ட யோசனைகள் தூதுவர் ஊடாக டில்லிக்கு

புதுடில்லி, ஜூலை 31

திருத்தப்பட்ட யோசனைகளைக் கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் ஊடாக அனுப்புவதாக இலங்கை அரசு முன்னர் ஒப்புக் கொண்டிருந்தது.

இப்படி தமிழ் அமைப்பின் பிரதிநிதி ஒருவர் சொன்னதாக இந்திய வானொலி அறிவித்தது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொறுப்பை தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்கும் என்று தான் நம்புவதாக அமைச்சர் தொண்டமான் சென்னையில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (இ-எ)

## ஒப்பற்ற ஞானதீபம் கந்தர் அநுபூதி

திருவருட் செல்வர் அருணகிரிநாதர் அருளிய நூல்களில் அருமையான நூல் கந்தர் அநுபூதி.

இது அளவிலே சிறியதாயினும் மகிமையிலே மிகப் பெரியது.

மகா மந்திர நூலில் கோர்க்கப்பட்ட அருள்



நிறைந்த அற்புத பக்தி மாலை.

பக்தி நெறியிலும் யோக நெறியிலும் ஞான நெறியிலும் பயிலும் சாதகர்களுக்கு வழி காட்டிடும் ஓர் ஒப்பற்ற ஞானதீபம்.

கந்தர் அநுபூதி பெற்று கந்தர் அநுபூதி சொன்னவர், அந்தம் ஆதி இல்லா இறைவனுக்கு அந்தாதி சொன்னவர், அருட் செல்வர் அருணகிரிநாதர்.

கந்தர் அநுபூதி கடினமற்ற பதங்களைக் கொண்டு யாவரும் எளிதில் பொருள் கண்டு சுலபமாகப் பாடல் பண்ணக் கூடிய வகையில் அமைந்தாலும் அரிய பொருள் பொதிந்த ஆழ்கடல்.

காப்புச் செய்யுளை நீக்கி 51 செய்யுட்களைக் கொண்டது.

திரு முருகனின் திருமேனியில் ஒடுங்கிய அகர முதல் க்ஷகாரம் இறுதியாக உள்ள ஐம்பத்தொரு அக்ஷரங்களும் ஐம்பத்தொரு பாடல்களைக் குறிக்கின்றது.

ஞான மார்க்கத்தைப் போதிப்பதால் இதனை ஞான நூல் என்றும் மந்திரங்களைப் போல் பல அரிய [illegible]

னைத் தன்னகத்தே மறைத்துக் கொண்டுள்ளதால் மந்திர நூல் என்றும் கூறுவர்.

ஆடும் பரிவேல் அணி சேவல் எனத் தொடங்கும் முதல் பாடலிலேயே, ஓங்காரமும் வேலும் மயிலும் துணை, ஓம் வேலும் மயிலும் துணை என்ற மகா மந்திரமும், "முருகன், குமரன், குகன்" என்ற மொழிந்து உருக வேண்டி "முருகன், குமரன், குகன்" என்ற மந்திரம் 15 வது பாடலிலும், "குமாராயநம; என்றும் ஆறெழுத்து மந்திரம் 36 ஆவது பாடலிலும் மறைந்துள்ளன"

நெஞ்சம் நெகிழ்ந்துருகத் தஞ்சத்தருள் சண்முகனுக்கு அருணகிரி நாதரால் சூட்டப்பட்ட செஞ்சொற் புனைமாலையாம் கந்தர் அநுபூதியிலும் அருட்செல்வர் அருணகிரியார் வாக்கில்

ஞானக்கதிர்

குமரன் குடிகொண்டுள்ளான் என பயிலும் முருகன் பிள்ளைத் தமிழ்.

மதுரம் பொழியும் அருணகிரி வாக்கினிடத்தும் அவன் இனித்திருந்த அநுபூதியிலும் முளைத்த பவள இளங்கிளையின் முளையே வருக வருகவே என்று பேசவதாலும் கந்தர் அநுபூதி ஓர் மந்திர நூல் என்பது உறுதிப்படுத்தப்படுகிறது.

திரு முருகனிடத்து தமக்கு ஏற்பட்ட அநுபவத்தையும், பெற்ற பேற்றையும் உபதேசத்தையும் நமக்கு விவரித்து அவற்றை நாம் பெறுவதற்குமான முருகன் அருளை அடைவதற்குமான வழி வழி முறைகளையும் அருட் செல்வர் அருணகிரிநாதர் உபதேசிப்பதால் கந்தர் அநுபூதி ஓர் ஒப்பற்ற [illegible] மறைக்க முடியாத [illegible]

எஸ். குகதாசன்



ஐயன் வள்ளுவர்

குறள்:

நயனுடையான் நல்கூர்ந்தா னாதல் செயும்நீர
செய்யாது அமைகலா வாறு.

பொருள்:

ஒப்புரவாகிய நற்பண்பு உடையவன் வறுமை உடையவனாதல், செய்யத்தக்க உதவிகளைச் செய்யாமல் வருந்துகின்ற தன்மையாகும்.

# கவி அரசன் கம்பனுக்கு நல்லூரில் பெருவிழா

## இன்று தொடங்கி நாளையும் நாளை மறுதினமும் நடைபெறும்

கவிஞர் பாரதிதாசன் "துன்பம் நேர்கையில் யாழ் எடுத்து நீ இன்பம் சேர்க்க மாட்டாயா" என்று குரல் கொடுத்தார். நெஞ்சுக்கு வருத்தம் தரும் செய்திகளே காதுக்கு எட்டிக் கொண்டிருக்கும் போது ஒரு நல்ல செய்தியும் கிட்டியிருக்கிறது. வருடா வருடம் கம்பன் காவியத்தைக் கால்கோலாக வைத்துக் கொண்டு தமிழ் இலக்கியப் பாற்கடலில் எம்மை எல்லாம் நீந்தித் திளைக்க வைத்த கம்பன் கழக இளைஞர்கள் தமிழ் தந்த துணிவே துணையாக அன்னார்கள் ஆகஸ்ட் 1, 2, 3-8-86 நாட்களில் விழாக் கொண்டுள்ளார்கள்; வரவேற்போம்; வாழ்த்துவோம்.

புதிது, புதிதாக ஆற்றலையும் அறிவையும் தேடிக்கண்டு மேடை ஏற்றுவதில் கம்பன் புகழ் பாடும் இளைஞருக்கு நிகர் அவர்களே. புதுமையான கோணங்களில் நின்று புரட்சிகரமான நிலைகளில் இனிமையும், தனிமையும் கொண்ட கருத்தோவியங்களை, கற்றுவல்லார் மூலம் தரவிருக்கிறார்கள்.

முதல் நாள் நிகழ்ச்சியில் பட்டி மண்டபம், வாதிடுவோர், நடுவர் எல்லோரையும் [illegible] சந்திர சிகிச்சைக்குள்ளாகும் நிலை மிகச் சுவாரசியமாக இருக்கும்.

காலத்தால் வேறுபட்ட கவிஞர்கள் ஆனால் மொழியால், உணர்வால் ஒன்றுபட்டவர்கள். இன்று நம் நாட்டின் நலிவுக்குக் காரணம் காண்கிறார்கள் என்றால் அதுவும் கவிதையில் என்றால் கேட்க வேண்டாமா? சங்கம் மருவிய காலம் தொட்டு புரட்சிக் கருத்துக்களை அள்ளி

க. சிவராமலிங்கம்

வீசி வேண்டாத பழமைகளை களைந்த இக்காலம் வரையுள்ள புலவர்களை மேடையில் காண்போம் கேட்போம்.

காண்டத்தைக் காட்டுவார் ஒருவர்; படலத்தைக் காட்டுவார் ஒருவர் பாத்திரப் படைப்பைக் காட்டுவார் ஒருவர். ஒரு பாடலை நோக்குவார் இன்னொருவர். கம்பன் பாற்கடல் உண்டெடுத்த புலவர் பெருமக்கள் எம்மை எல்லாம் கம்பன் கவிக்கடலில் மூழ்க வைப்பார்கள் சுவைப்போம் வாரீர்.

நாட்டில் நாடகம் நடந்து கொண்டிருக்கிறது. எனவே நாம் ஏன் நடிக்க வேண்டும் என்று விட்டு விட்டார்கள் நாடகத்தமிழை.

இவை மட்டுமா தருகிறார்கள்? இசை மழையும் பொழியச் செய்வார்கள். அருளாளர் ஆசியுடன் ஆரம்பமாகி மேன்முறையீட்டோடு முடிவடையும் விழா இனிது நிறைவு பெற இறை அருள் வேண்டி நிற்போம்.

இதே நேரத்தில் கம்பன் கழகத்தின் ஆக்கத்துக்கு அரும்பாடுபட்ட தமிழ் நாட்டுப் பேரறிஞர் கம்பவாரிதி அமரர் இராதா கிருஷ்ணன் அமரர்களான திருகோணமலை கழகப் புலவர் சிவசேகரம், தேவன் யாழ்ப்பாணம், வித்துவான் ஆறுமுகனார் போன்றோரை நன்றிப் பெருக்கோடே சிந்தை செய்வோம்.

இன்று கம்பன் கழகத்துக்கு ஆதரவும் ஆற்றுப்படுத்தலும் செய்யும் அறிஞர்கள் பேராசிரியர் சண்முகதாஸ், வித்துவான் வசந்தா வைத்தியநாதன், வித்துவான் சொக்கன், அறிஞர் பத்மநாதன் போன்ற பெருமக்களுக்கும் கழகம் நன்றி கூறக் கடமைப்பட்டது.

## 9208 அகதிக் குடும்பங்கள்

திருமலை மாவட்டத்தில் தற்சமயம் 9,208 குடும்பங்கள் அகதிகள் முகாம்களில் தங்கியுள்ளன.

இவற்றில் சிங்கள, தமிழ், முஸ்லிம் குடும்பங்கள் அடங்குகின்றன. (இ-150)

## இதித்தாரம்

முரளியார், என்ன வலு கெதியா நடக்கிறீர்! எங்கே பயணம்? என்ன அவசரம்? சந்தைக்குப் போறீரோ?

சரி, சரி அப்ப உம்மை நான் மினக்கெடுத்த விரும்பயில்லை. நேரம் செல்லைப்போனா சமகடையாய் போயிடும். இருக்கிறதைக் கூடிக் குடுத்து வாங்கிற நிலையும் வந்து உனக்குக் கை நட்டமாய்ப்போய்விடும்.

அடடே சாமான் வாங்கக் குடுத்திட்டாய், கடையில விட்ட மிச்சக் காசு வாங்கவோ போறாய்?

கவலைமடா தம்பி! உவை எங்கடை கடைக்காரர் மிஞ்ச காசுகளை மெதுவாக நைசாகத் தள்ளி விடுகினம்.

நாங்கள் குடுக்கைப் பிக்கை கவனமாய் பார்த்து வாங்குகினம். புது நோட்டைக்கூட பத்துத்தரம் திருப்பித்திருப்பிப் பார்த்து, முன்னுக்கு பின்னுக்கு ஆராய்ந்து பார்த்துத்தான் வாங்குகினம்.

ஆனால் தங்களிட்டை இருக்கிற கிழிஞ்ச நோட்டுக்களைத் தங்களுக்குச் சிரமமில்லாமல் எங்களிட்டை தள்ளி விடுகினம். ஆனால் எங்களிட்டையும் அது வாய்க்காது சிலபேர் ஏமாந்து போறது உண்டு தான்!

* * *

நீ சந்தை என்ட உடனே எனக்கு நேற்றுச் சந்திச்ச ஒரு தம்பி சொன்ன விஷயம் நினைவுக்கு வருகுது.

அவன் தம்பி நல்ல இளவயசு. ஆனால் கனதியாய் கதைக்கிறான்.

என்ன அண்ணை நீங்களும் இருக்கிறியள். உங்கடை பத்திரிகையில இதுகளையும் எல்லோ எழுதவேணும் என்டு தொடங்கினான்.

விழிப்புக் குழு, கண்காணிப்புக்குழு, இணைப்புக் குழு என்டு இப்ப எங்கடை பகுதியில குழுக்கள் எல்லாம் கூடிப் போச்சு.

வீட்டுக்கொரு குழு என்ட நிலை என்டு சொன்னாலும் பரவாயில்லை. உதுகள் உல்லாம் இருந்து என்ன பலன்?

குழுக்களும் கடக்கூட சிற்றூர்களில எல்லாம் மாட்டிறைச்சிக் கடையளும் கூடிக் கொண்டு போகுது.

கோயில்கள் இருக்கிறதுக்கு அருகாமல் தொலைவில கூட மாட்டிறைச்சிக் கடையள் போடுகினம். கதைத் தடுத்து நிறுத்த உந்தக் குழுக்கள் நடவடிக்கை எடுக்கக் கூடாதே! இது அந்தத்தம்பியின் வாதம்.

சைவசமயிகளைப் பொறுத்தமட்டில் மாட்டிறைச்சி சாப்பிடுவது தவிர்க்கப்பட்டுள்ளது. பசுவைத் தாயாகத் தெய்வமாகக் கருதுவதுண்டு.

ஆனால் இப்ப அந்தக் கட்டுப்பாடு எல்லாம் குறைவு. காலம் கலிகாலம் போச்சு.

கிறிஸ்தவர்கள் மாட்டிறைச்சி சாப்பிடுவது தடை செய்யப்படவில்லை.

அதால இப்ப மாட்டிறைச்சிக் கடை போடுறது புது பிஸ்னெஸ்ஸா உருவெடுத்து வருகுது. ஆனால் அதுகளை அப்பிடி விடக்கூடாது. தடுக்க வேணும்.

குறிப்பாக கோயில்கள் இருக்கிற இடங்களில இருந்து இரண்டு மைல் தொலைவுக்குள்ள மாட்டிறைச்சிக் கடை போடக்கூடாது என்டு தடுக்க வேணும்.

அதில உந்தக் குழுக்கள் கொஞ்சம் கவனம் செலுத்தினால் நல்லது.

உங்களைப் போன்ற [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

B.A. 86 பொருளியல்
S. வரதராஜன்
ஆரம்பம்: 2-8-86. 2.00 p.m.

பொருளியல்
கல்வி நிலையம்
200, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.



# உதயன்

01-08-1986 வெள்ளிக்கிழமை



பொருளியல் கல்வி நிலையம்
200, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
A/L 87, 88 பொருளியல்
S. வரதராஜன்
ஆரம்பம்: 2-8-86
87-3.00 p m 88-4.00 p m.


## எம்.ஜி.ஆர்--தொண்டா சந்திப்பு இல்லை

கொழும்பு, ஆகஸ்ட் 1
தமிழக முதல் அமைச்சர் திரு எம். ஜி. இராமச்சந்திரனை இம் முறையும் அமைச்சர் தொண்டமான் சந்திக்கவில்லை

தமிழ் நாட்டில் நிதி அமைச்சர் திரு. வி ஆர். நெடுஞ்செழியனைச் சந்தித்ததாக அமைச்சர் தொண்டமான் நேற்றுச் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இனப் பிரச்சினைக்குத் தமிழர் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தான தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் தமிழக மக்கள் அக்கறை காட்டுகின்றனர்.

கௌரவமான தீர்வு ஏற்பட்டு பத்திரமாகத் தமிழ் அகதிகள் இலங்கை திரும்பவேண்டும் என்பதிலும் தமிழக மக்கள் உறுதியாக நிற்கின்றார்கள்.

இப்படி அமைச்சர் தொண்டமான் கூறினார். (உ-எ)

## சிப்பாய் மரணம் தந்தை தற்கொலை

கொழும்பு, ஆக. 1
திகிரவாதிகளின் தாக்குதலில் விமானப்படைச் சிப்பாயான தனது மகன் இறந்துவிட்டதைச் சகிக்க முடியாத நிலையில் 66 வயதான தந்தை சாராயத்துடன் நஞ்சையும் சேர்த்துக் குடித்து உயிரைப் போக்கிக் கொண்டார்.

இச்சம்பவம் பொறுப்பான என்ற பகுதியில் இடம்பெற்றது

தற்கொலை செய்து கொண்ட தந்தையின் பெயர் பீட்டர் அபேடாகிப். (உ. ஐ.எ)

## தேடிச் சென்றபோது வயலில் சடலங்கள்

### வவுனியாவில் இளைஞர்கள் மூவருக்கு நடந்த பயங்கரம்

யாழ்ப்பாணம், ஆக. 1
சிப்பாய்கள் கைது செய்துகொண்டு சென்ற மூன்று இளைஞர்கள் வயல் வெளியில் சடலமாகக் கிடந்தனர்.

சம்பவம்பற்றித் தெரிய வருவதாவது:

நேற்றுக்காலை மூன்று மணி அளவில் வவுனியா இராணுவ முகாமிலிருந்து ரோந்து சென்ற சிப்பாய்கள் ஒபார் சின்னக்குளம் என்ற இடத்தில் மூன்று இளைஞர்களைக் கைதுசெய்து முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

இவர்கள் கைதுசெய்யப்பட்டது தொடர்பான விவரங்களை அறிய இவர்களது உறவினர்கள் வவுனியாவுக்குச் சென்று கொண்டிருந்த போது சாஸ்திரி கூளாங்குளம் வயல்வெளியில் இந்த மூன்றுபேரும் சடலமாகக் கிடக்கக் காணப்பட்டனர்.

இதனை அடுத்து மூன்று சடலங்களும் உறவினர்களால் வவுனியா ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டன.

இறந்தவர்களின் விவரம் வருமாறு:
விரையா விஜயபாலன் வயது (19), மார்கண்டு சுப்பிரமணியம் அல்லது ராசு வரதராசா (22 வயது), இராமையா ஆசைத்தம்பி (60 வயது).

இவர்கள் அனைவரும் ஒபார் சின்னக்குளத்தைச் சேர்ந்தவர்கள். (இ10)


### புனித இயக்கங்களுக்கு பணிவான வேண்டுகோள்

மண்டைதீவு மின்தாள் ஆலயில் பாதுகாப்பு சேவையாற்றும் எனது கணவர் இராமலிங்கம் சென்ற 23-7-86 வேலைக்குச் சென்றவர் இன்றுவரை வீடு திரும்பவில்லை. அரச அதிபர் விசாரணையில் இராணுவம் கைது செய்யவில்லையென அறிவித்துள்ளது. எம்மைக்காக்கும் நீங்கள் கருணையோடு அவரைத் தேடித்தாருங்கள்.

ஆதரவற்ற மனைவி
முத்துமணி இராமலிங்கமும்
பிள்ளைகளும்



### Vacancy in Food Industry

**PRODUCTION ASSISTANT**

A growing food industry in Jaffna is looking for a young, smart and active female living within 3 miles from Jaffna Town and with particular liking to food processing work, to be trained as Production Assistant Those with experience in related work or holding a Science degree will be given preference,

Apply with complete bio data within 7 days to;

Advertiser M 60,
C/o dyn ads,
476, Main Street, Chundikuli, Jaffna.



இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15-ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட், வெளியீட்டாளரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 01-08-1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power House Road. JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under Number QJ 60 N 86


### இலங்கை அரசு - கூட்டணி

# உடன்பாடு ஒன்று உருவானால் அமுல் செய்ய இந்தியா உறுதி

## தொண்டா தகவல்

கொழும்பு, ஆகஸ்ட் 1
இலங்கை அரசுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இடையே உடன்பாடு ஒன்று ஏற்படுமானால் அதை நடைமுறைப் படுத்துவதற்குத் தன்னாலியன்ற அனைத்தையும் செய்ய இந்தியா உறுதி பூண்டுள்ளது

பிரதமர் ராஜீவ்காந்தியுடன் பேசியபோதுதான் இதை அறிந்து கொண்டதாக அமைச்சர் எஸ். தொண்டமான் கொழும்பில் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இந்திய விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்றுக் காலை கொழும்பு திரும்பிய அமைச்சர் தொண்டமான் உடனடியாகச் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.

அவர் மேலும் சொன்னதாவது:

இலங்கை அரசுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இடையேயான பேச்சுக்கள் பற்றி இந்திய அரசு மிகுந்த அக்கறையுடன் கவனித்து வருகின்றது.

பிரதமர் ராஜீவ்காந்தி, இந்திய வெளியுறவு ஆலோசனைக் குழுத் தலைவர் திரு ஜி பி. பார்த்தசாரதி, வெளியுறவு அமைச்சர் திரு பி சிவ்சங்கர், இணை அமைச்சர் கே ஆர். நாராயணன் ஆகியோருடன் நடத்திய பேச்சுக்களின் போது இதை உணரக்கூடியதாக இருந்தது.

அரசுடன் பேச்சுக்கள் நடத்துவதற்குத் தகுதியுள்ளவர்களாகத்தான் தமிழர் விடுதலைக் கூட்டணியை இந்தியா கருதுகிறது.

தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக பேச்சுக்களில் கலந்து கொள்ளும் தகுதி கூட்டணிக்கு உண்டு.

ஆகவே நாம் அனைவரும் கூட்டணியின் கையைப் பலப்படுத்த வேண்டும்.

பேச்சுக்கள் அர்த்தமுள்ளதாக இருக்கவேண்டும் வெறும் புள்ளிகளைப் பெறவேண்டும் என்ற முறையில் நடத்தப்படும் விவாதம் போல பேச்சுக்கள் அமையக்கூடாது.

இனப்பிரச்சினைக்குப் பேச்சுக்கள் மூலமே தீர்வு காணப்பட வேண்டும்; காணப்படும் என்ற நம்பிக்கையும் அதிகரித்துள்ளது.

இப்படி அமைச்சர் தொண்டமான் சொன்னார். ( -எ)

## தாமதமான ஒய்வூதியம் வழங்கப்படுகிறது

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 1
தபாற் கந்தோர் மூலம் ஒய்வூதியம் பெறுவோரில் சில பகுதியினரின் ஜூலை மாதக் கொடுப்பனவுகள் தவிர்க்க முடியாத காரணங்களால் தடைப்பட்டிருந்தன.

அவர்களுக்கான புதிய கொடுப்பனவுத் திகதிகளை யாழ். தபால் அதிபர் அறிவித்துள்ளார்.

நாளை 2 ஆம் திகதி: அளவெட்டி, காரைநகர், கொடிகாமம், கோப்பாய், காங்கேசன்துறை.
4 ஆம் திகதி: கன்னாகம், சாவெட்டி, பருத்தித்துறை, தெல்லிப்பளை. (இ-5)

## தமிழர்களுடன் சேர்ந்து செயல்பட்டதற்காகத் தாக்கினர்

### ஹென்றி பெரேரா சாட்சியம்

கொழும்பு, ஆக. 1
ஏன் தமிழர்களுடன் சேர்ந்து செயல்படுகிறீர்கள் என்று கேட்டு என்னைத் தாக்கினர்

இப்படி லெனின் என்று அழைக்கப்படும் ஹென்றி பெரேரா கொழும்பு மேல் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கையில் தெரிவித்தார்.

வெடிகுண்டுகள் வைத்திருந்ததாகப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஹென்றி பெரேரா மீது குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கு சம்பந்தமாக அவர் பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலம் செல்லுபடியாகக் கூடியதா? என்பது பற்றித் தீர்மானிக்கும் விசாரணைதான் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

'உமா மகேஸ்வரன் தலைமையிலான தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்துடன் நான் நெருங்கிச் செயல்பட்டு வந்தேன்' என்றும் ஹென்றி பெரேரா தனது சாட்சியத்தில் தெரிவித்தார். (உ-எ)

## தமிழ் பெண்ணுக்கு 18 மாதச் சிறை

### போராளிகள் பற்றி தகவல் தெரிவிக்கத் தவறிய குற்றம்

கொழும்பு, ஆக. 1
போராளிகள் பற்றித் தகவல் தெரிவிக்கத் தவறிய குற்றத்தை ஒப்புக் கொண்ட சங்கானையைச் சேர்ந்த நடுத்தர வயதுப் பெண்ணுக்கு 18 மாதச் சிறைத் தண்டனை நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டது

சங்கானை, ஆலய்த்திரி வீதியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை சரஸ்வதி என்பவருக்கே நீதிபதி விமல் விக்ரமசூரிய இத்தண்டனையை விதித்தார்.

உமாகரன், ஈசன், கண்ணன், சிவனேஸ்வரன் ஆகியோர் பற்றி 1983 ஜனவரி முதலாம் திகதிக்கும் மார்ச் 31 க்கும் இடையே தகவல் தெரிந்திருந்தும் பொலீஸாருக்கு தெரிவிக்கத் தவறியதே எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டாகும். (உ-ஐ-எ)

## சீனிக்கப்பல்

யாழ்ப்பாணம், ஆக. 1
வடபகுதி வந்த 'மந்துறட்' கப்பலில் இருந்து சீனி இறக்கும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

இக்கப்பலில் ஆயிரம் தொன் சீனி வந்திருக்கிறது.

தொடர்ந்து வரும் கப்பல்களில் வடபகுதிக்கான உரம் வருமென எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-5)

## மன்னாரை நோக்கி சிப்பாய்கள்

யாழ்ப்பாணம், ஆக. 1
வவுனியா இராணுவ முகாமில் இருந்து நூற்றுக்கு மேற்பட்ட சிப்பாய்கள் வாகனங்களிலும், கால்நடையாகவும் நேற்று மன்னாரை நோக்கி ரோந்து சென்றனர். என்று கூறப்படுகிறது. (இ-10)

## ரீநோர் தொழிலாளியின் பிணம் வயலில்

யாழ்ப்பாணம், ஆக. 1
கடந்த திங்கட்கிழமை காரைநகர் கடற்படையினரால் அழைத்துச் செல்லப்பட்ட ரீநோர் தொழிலாளி வ. நல்லையா (வயது 35) பிணமாகக் கண்டுபிடிக்கப்பட்டார்.

இவரது சடலம் வயல் வெளி ஒன்றில் கிடக்கக் காணப்பட்டது. (இ-5)

## வேலைக்குச் சென்றவரை காணவில்லை

யாழ்ப்பாணம், ஆக. 1
கிராமசபைக்கு வேலைக்குச் சென்றவரைக் காணவில்லை.

வியாழக்கிழமை காலை வவுனியாவில் இருந்து வவுனியா கிராமசபைக்கு வேலைக்குச் சென்ற ஊழியரான சேதுரவீந்திரன் (21 வயது) வெள்ளிவரை வீட்டுக்கு திரும்பவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக வவுனியா பிரஜைகள் குழுவினர் வவுனியா இராணுவ அதிகாரிகளுடன் தொடர்புகொண்ட போது அப்படியான ஒருவரை நாம் கைதுசெய்யவில்லை எனக் கூறப்பட்டதாம். (இ-10)

## மந்திரி...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
தார்.

பிரசவ விடுதியைத் திறந்து வைத்த பின்னர் அமைச்சர் அரசினர் பாடசாலைக் கட்டடம் ஒன்றைத் திறந்து வைக்க வேண்டி இருந்தது.

நிகழ்ச்சி ரத்து

அந்த நிகழ்ச்சியை அமைச்சர் உடனடியாக ரத்துச் செய்துவிட்டுக் ஹெலிக்கொப்டர் மூலம் கொழும்பு புறப்பட்டார்.

அதன் பின்னர் படையினர் சரமாரியாக நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் கொம்மாதுறை அரசினர் தமிழ் பாடசாலை ஆசிரியை திருமதி ஜோசப் உயிரிழந்தார். டிராக்டர் சாரதியான தமிழர் ஒருவரும் உயிரிழந்தார்.

காயமடைந்த படையினர் விமானமூலம் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இறந்த விசேஷ பொலிஸின் பெயர் ஓமர்தீன். (உ-எ)

## கரடிக்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
அடுத்து இப் பகுதியில் இருந்த தமிழ்க் குடும்பங்கள் பயம் காரணமாக காடுகளில் தஞ்சமடைந்தன.

இது சம்பந்தமாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கும் அரச அதிபருக்கும் வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவினர் முறைப்பாடு செய்துள்ளனர். (இ-10)

## பரீட்சையை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
கூறிய சொற்பாடுகளை எவர் மேற்கொள்ளினும் அவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் — இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

## வயாவிளான்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
மின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் பின்வாங்கினர்.

இத்தாக்குதலில் வீரமுடன் போராடிய மக்கள் விடுதலைப்படைத்தோழர் பவன் (அந்தோனிதாஸ் திருகோணமலை) வீரமரணம் அடைந்தார். தோழர் பவனின் சடலத்தை மக்கள் விடுதலைப்படையினர் மீட்டு இராணுவ மரியாதையுடன் கொக்குவில் மயானத்தில் தகனம் செய்தனர்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ)

## யாழ்..-

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
மோட்டோ பாவித்து முகாமைத் தாக்குகின்றனர். முகாமுக்கு வரும் ஹெலிக்கொப்டர்கள் கூடத் தாக்கப்படுகின்றன

இப்படி உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆயிரம் மீட்டர் பிரதேசத்திலுள்ள இருந்து மக்களை வெளியேற்ற வேண்டும் என்று முன்னர் சொல்லப்பட்ட போது பொதுமக்கள் அதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தினர். இந்திய அரசாங்கம் இதற்கு இணங்கவில்லை... [illegible]

## புலிகள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
எங்களால் மீட்கப்பட்டது.

பின்னர் கறுப்புச் சட்டைக் காரர்கள் காங்கேசன் குளத்திலிருந்து கல்மடு வழியாக பின் வாங்கும் போது அவர்கள் மீது சிலிண்டர், கிரனேட் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

அங்கிருந்து பின்வாங்கிய அவர்கள் மீது ஈச்சங்குளத்தில் வைத்து நிலக்கண்ணி வெடித் தாக்குதலும் நேரடி மோதலும் தொடுக்கப்பட்டது.

இதனால் பல கறுப்புச் சட்டைக்காரர்கள் உயிரிழந்தனர் பலர் காயமடைந்தனர்.

கறுப்புச் சட்டைக்காரர்களின் துப்பாக்கிப் பிரயோகத்தில் முகிலன் வீரமரணமடைந்தார்.

எமது தரப்பில் வேறு இழப்பு இல்லை.

இம் மண்ணின் விடிவுக்காக மரணித்த இரண்டாவது லெப்டினன்ட் திருபன் (பொ. கலாநிதி — பாவற்குளம்), முகிலன் (கு. கணேசலிங்கம் — பாவற்குளம்) ஆகியோருக்கு எமது வீர வணக்கம்.

— இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

வாதகமான முறையில் அறிவித்து இருந்தது. (உ-எ)

### தீர்வு ஏற்பட்டால்

## படையினருக்கே மகிழ்ச்சியாம்

கொழும்பு, ஆகஸ்ட் 1
இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டால் மிகவும் மகிழ்ச்சி அடையப்போவது ஆயுதப்படையினரே!

இப்படிச் சொன்னார், தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி.

இரத்மலானையில் கொத்தலாவல பாதுகாப்பு அக்கடமியில் நடந்த அணி வகுப்பு மரியாதை நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசுகையில் அமைச்சர் முன்கண்டவாறு சொன்னார். (இ-எ)

## பிங்கிரிய பகுதியில் இரண்டு தமிழர் கைது

கொழும்பு, ஆக. 1
பிங்கிரிய பகுதியில் இரண்டு தமிழ் இளைஞர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

சிங்களவர் ஒருவரின் வீடு ஒன்றில் தங்கி இருக்கையில் அந்த இளைஞர்கள் கைது செய்யப் பட்டனர்.

இதனை அடுத்து பொலன்னறுவைப் பகுதியில் மகாவலி அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட்டுள்ள ஒரு ஒப்பந்தக் காரரிடம் இருந்த வாக்கி டோக்கி சாதனத்தை அபகரிக்க முயன்ற சிங்கள இளைஞர்கள் இருவரையும் பொலீஸார் கைதுசெய்தனர்.

இச்சம்பவங்களைத் தொடர்ந்து அப்பகுதிகளில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. (உ-ஐ-எ)

## தமிழ் தகவல் நிலைய வட பிரதேச செயலகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், ஆக 1
தமிழ்த் தகவல் நிலைய வட பிராந்தியச் செயலகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு உள்ளது

காலத்தின் தேவையை உணர்ந்து இச் செயலகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக செயலகப் பொறுப்பாளர் அறிக்கை மூலம் தெரிவித்து உள்ளார்.

அறிக்கை விவரம் வருமாறு;

தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டத்தைப் பேச்சுவார்த்தை என்னும் திட்டமிட்ட சதியினால் தோற்கடித்து விட பல்வேறு வெளிசக்திகள் முனைப்புடன் செயலாற்றும் காலகட்டம் இது.

எனவே காலத்தின் தேவையை உணர்ந்து தமிழ் தகவல் நிலைய வட பிராந்தியச் செயலகம் இங்கு ஆரம்பிக்கப்படுகிறது.

இது இயக்க சார்பின்மை, சுயாதீனம் ஆகியவற்றை நிலைநாட்டி பணியாற்றும்.

1. இலங்கைக்கு வெளியில் இயங்கும் தமிழ் தகவல் நிலையச் செயலகங்களுடன் தொடர்பு பட்டு இங்கு இயங்கும்

2. விடுதலை இயக்கங்களினால் மக்கள் மத்தியில் முன் வைக்கப்படும் நல்ல செயல் திட்டங்கள் உட்பட மக்கள் சேவைத் திட்டங்களுக்கும் ஆதரவு வழங்கும்.

இப்படி அந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது. ( -எ)

## பிரவுண்வீதி வழியாக மினிபஸ் சேவை

யாழ்ப்பாணம் ஆக 1
யாழ். பிரவுண் வீதி, கொண்டாவில் 808 இலக்கப் பாதைவழியாக தனியார் மினிபஸ் சேவை இன்றுமுதல் நடத்தப்பட உள்ளது.

வட பிராந்திய மினிபஸ் சேவைச் சங்கத் தலைவர் திரு. பொன். மதிமுகராசா இந்தச் சேவையை ஆரம்பித்து வைப்பார்.

இன்று காலை ஆறு மணிக்கு இந்தச் சேவை ஆரம்பிக்கப்படும்

இதேவேளை பாடசாலை மாணவர்கள், ஆஸ்பத்திரி ஊழியர்கள் செல்ல தற்கென விசேட மினிபஸ் சேவையும் நடத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-19)

## மீன் பறிமுதல்

யாழ்ப்பாணம், ஆக. 1
வல்வெட்டித்துறைக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களைச் சுற்றிவளைத்த கடற்படையினர் அவர்கள் பிடித்து வைத்திருந்த மீனை எடுத்துச் சென்றனர்.

இச்சம்பவம் நேற்று நடைபெற்றது.

நேற்றுப்பகல் வல்வெட்டித்துறையை அண்டிய கடல்பகுதியில் ஐந்துக்கும் மேற்பட்ட வள்ளங்களில் மீனவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது திடீரென இவர்களைச் சுற்றி வளைத்த கடற் படையினர் வள்ளங்களைக் கைப்பற்றி மீன் மற்றும் வலைகளைப் பறிமுதல் செய்தனர்.

மீனவர்கள் 'தப்பினோம் பிழைத்தோம்' என்று கரையை வந்து சேர்ந்தனர். (இ-10)

## சிப்பாய் தற்கொலை

கொழும்பு, ஆக. 1
குடும்பத்தகராறு காரணமாக மனைவியைத் தாக்கிவிட்டு, கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார் ஒரு இராணுவ சிப்பாய்.

நீர்கொழும்புப் பகுதியில் இறந்த சிப்பாயின் பெயர் ஷெல்டன், வயது 37. (உ-ஐ-எ)

## சு. க. வின் மாற்று யோசனை

கொழும்பு, ஆக. 1
அரசின் மாகாணசபைகளுக்குப் பதிலாக மாற்று யோசனைகள் அடங்கிய திட்டம் ஒன்றை வெளியிட சுதந்திரக்கட்சித் தலைமைப் பீடம் முடிவு எடுத்து உள்ளதாகத் தெரிய வருகின்றது.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான குழு ஒன்று மாற்று யோசனைகளைத் தயாரிப்பதில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது. (உ-ஐ-எ)

## புதுடில்லியில் சந்திப்பு

புதுடில்லி, ஜூலை 31
புதுடில்லி சென்றிருக்கும் கூட்டணிக் குழு, அங்கு இந்திய வெளியுறவு கொள்கை வகுப்புக் குழுவின் செயலாளர் ஜி. பார்த்தசாரதி, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஏ. பி. வெங்கடேஸ்வரன் ஆகியோரைச் சந்தித்துப் பேசியது. (உ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org